செ.வெ.எண்: 20 நாள்: 11.02.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப் 4 தேர்வினை 34,933 நபர்கள் எழுதினர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடைபெற்ற குரூப்-4 தேர்வு நடைபெற்ற மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.02.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழகம் முழுவதும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் குரூப்-4 தேர்வு நடைபெற்றது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-4 தேர்வு நடைபெற்ற மையங்களான இலுப்பூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இலுப்பூர் மேட்டுச்சாலை மதர்தெரசா பொறியியல் கல்லூரி மற்றும் மதர்தெரசா பல்தொழில்நுட்ப கல்லூரி, விராலிமலை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, விவேகா மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, கீரனூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 98 இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 136 தேர்வுமையங்களில் மொத்தம் 40,910 தேர்வர்கள் தேர்வு எழுத நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. இதில் இன்றைய தினம் 34,933 நபர்கள் தேர்வு எழுதினர். இது 85 சதவீதம் ஆகும். 5977 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை.

மேலும் தேர்வு மையங்களில் அகவி, செல்லிடப்பேசி, கணிப்புக்கருவி, நினைவககுறிப்பு, புத்தகங்கள், மின்னணு சாதனங்கள், பதிவு செய்யும் உபகரணம் உள்ளிட்ட பல்வேறு சாதனங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன. தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் அனைத்து தேர்வு மையங்களையும் கண்காணிக்க 26 நடமாடும் கண்காணிப்பு குழுக்களும், 24 பறக்கும் படைகளும், 136 ஆய்வு அலுவலர்களும் மற்றும் 136 தேர்வு முதன்மை கண்காணிப்பாளர்களும் பணியில் ஈடுப்பட்டனர். தேர்வு மையங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் முழுமையாக வீடியோ கேமராக்கள் மூலம் பதிவு செய்யப்பட்டது. தேர்வு முடிந்தவுடன் அனைத்து வினாத்தாள்களும் உரிய பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.

இந்த ஆய்வின் போது இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜெயபாரதி, வட்டாட்சியர் திரு.சோனைகருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**